DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 291/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.9 P.W.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சம்பத்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.02.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் தனிப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 11.10.2022 ம் தேதி காலை 7.00 மணியளவில் முதல் நிலை காவலர் 317 சம்பத் நிலைய அலுவலில் இருந்த போது நிலையம் ஆஜரான உடுமலை காவல் நிலைய இரண்டாம் நிலை காவல்ர் கலைசெல்வன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 559/2022 ச/பி 294(பி),323,506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காகா எனது பார்வைக்கு வைத்தார். பின்னர் நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 8.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்னேஷ், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மாதிரி வரைபடம **அ.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கலைசெல்வன், கிஷோர், ரஞ்சித் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியை தேடி புலன் வைத்த போது 11.10.2022 ம் தேதி 12.45

மணியளவில் உடுமலைப்பேட்டை வாசவி ராஜகாளியம்மள் கோவில் அருகில் TN 78 S 7101 HERO Pleasure வாகனத்தில் வந்த எதிரியை வாதி அடையாளம் காட்டியவரை 13.00 மணிக்கு பொது ஜன சாட்சிகள் பாலாஜி லோகநாதன் முன்னிலையில் எதிரி ஓட்டி வந்த வாகனத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரி கண்ணன் த/பெ. முருகேசன் என்பவரை 15.00 நிலையம் ஆஜர்படுத்தி திரேக பரிசோதனைக்கு பின் கனம் நீதிமன்ற காவலுக்காக தக்க வழிக்காவல் வசம் ஒப்படைத்தார். வழக்கு சொத்தை படிவம் 91 வழியாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் அசா.ஆ.7 என குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் சம்பத் என்பவரை விசாரத்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. அசா.1 கலையரசன் சம்பவ சமயத்தில் இரண்டாம் நிலை காவலர் என்றால் ஆமாம். அசா.1 சம்பவ தினத்தின் போது ஓய்வு நாள் என்பதை காட்டுவதற்கான காரணம் செய்யவில்லை என்றால் ஆமாம். நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 50 மீட்டர் தான் இருக்கும் என்றால் ஆமாம். சம்பவ நடைபெற்றது சம்பந்தமாக அடுத்த நாள் காலை 7.00 மணிக்கு புகார்தாரர் புகார் கொடுப்பதற்கு நிலையத்திற்கு தகவல் தெரியாது என்றால் ஆமாம்.
2. சம்பவ நடந்த அரை மணி நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் சாட்சிகளை அப்போது விசாரித்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றல் சரிதான். அசா.1 க்கு கலையரசன் என்பவருக் மது அருந்தும் பழக்கம் உள்ளது தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. சம்பவம் தினத்தன்று மது அருந்தி இருந்தாரா என்றால் தெரியாது, அடுத்த நாள் தான் பார்த்தேன். அசா.1 க்கு காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தவில்லை என்றால் வெளிப்புற காயங்கள் இல்லாததால் செய்யவில்லை. அசா.1 கொடுத்த புகாரிலும் வாக்குமூலத்திலும் கன்னத்திலும் தோள் பட்டையிலும் அடித்ததாக சொல்லியுள்ள நிலையில் எந்த இ டம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.
3. அசா.1 கொடுத்த புகாரிலும் வாக்குமூலத்தில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி கிஷோர் மற்றும் ரஞ்சித் என்பவர்களை எங்கு வைத்து எப்போது விசாரித்திர்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து

11.10.2022 சுமார் காலை 9.00–12.00 மணி வரை. பட்டியல் சாட்சி கிஷோர் மற்றும் ரஞ்சித் இருவரும் Zomato ல் பணிபுரிபவர்கள் என்றால் சரிதான். சாட்சி ரஞ்சித் என்பவர் டெலிவரிக்காக வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான் .எனது விசாரணையில் டீ சாப்பிட வந்ததாக சொல்லி உள்ளார் என்றால் ஆமாம். பட்டியல் சாட்சி கிஷோர் மற்றும் ரஞ்சித் ஆகியோர்களை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. அசா.1 கொடுத்த புகாரிலும் வாக்குமூலத்திலும் கேரளா லாரி தனக்கு முன்னாள் சென்று கொண்டதாக சொல்லியுள்ளார் என்றால் தனக்கு முன்னால் கனரக வாகனம் என சொல்லி உள்ளார். மாறாக அவருக்குஎதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி லாரி வந்ததாக சொல்லி இருந்தால் அது தவறு என்றால் எனது விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.
5. சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் பார்வை மகசரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில சம்பவ இட சாட்சிகள் இருவரும் சம்பவ இடத்துக்கு அருகில் வசிப்பவர்கள் இல்லை என்றாலும் வேறு இடத்தில் வசிப்பவர்கள் என்றாலும் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள காலனியில் வசிப்பவர்கள். அக்கம் பக்கம் கடையில் உள்ளவர்கள் மற்றும் டீக்கடையில் உள்ளவர்களை சாட்சியாக போடவில்லை என்றால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்தான் அவர்கள். வாதி அடையாளம் காட்டியதாக தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.
6. ராஜகாளியம்மன் கோவில் அருகில் வைத்து எதிரியை கைது செய்ததாக சொல்லியுள்ள நிலையில் குறிப்பிட்ட அந்த பக்கம் உள்ளது கோவிலுக்கு மேபுறமா அல்லது கிழபுறமா என்றும் எந்த இடம் என்று சொல்ல முடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, கோவில் அருகில் என்று உள்ளது. தற்போது எந்த இடம் என்று குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது.
7. வழக்கின் படிவம் 91 கனம் நீதிமன்றத்திற்கு 4 நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் 11 ம் தேதி எதிரியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருப்பப்பட்டதால் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வண்டியுடன் ஒப்படைக்கப்பட்டதால் திருப்பப்பட்டது என்றால் சரியல்ல.சொன்னபடி எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சொன்ன விதத்தில் எதிரியிடமிருந்து வாகனம் கைப்பற்றப்படவில்லை என்றாலும் காவல்நிலையத்தில்

எதிரியை விசாரிக்க வர சொல்லி வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை கண்ணுற்ற கிஷோர் மற்றும் ரஞ்சித் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் நால்வரும் காவல் நிலைய கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல.

8. வழக்கின் வாதி அசா.1 கலையரசன்அதாவது இந்த வழக்கு அந்த மாதிரி அசா.1 கலையரசன் என்பவர் மது போதையில் சம்பவத்தை என்று தனக்கு எதிர் புறமாக வந்த எதிரி ஓட்டி வந்த வாகனத்தை மறித்து அவரிடம் தகராறு செய்து வாதி தான் எதிரியை தாக்கி விட்டு அவன் காவல்துறை சேர்ந்தவர் இந்த போர்வையில் அடுத்த நாள் அவர் மீது பொய் வழக்கு போட்டுள்ளிர்கள் என்றாலும் , சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன படி எதிரி எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் குற்ற அறிக்கையில் சொன்னபடி குற்ற சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.